**<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>**

**அனுப்புநர்**

**திருமதி. சு. லீலாவதி உண்ணி**
**துணை மேயர்** ,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 3848 / 2014 / எம்சி. 8 நாள் : 28 .05.2014</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **29.05.2014** அன்று நடைபெறவிருந்த மாமன்ற சிறப்புக் கூட்டம் தவிர்க்க இயலாத நிர்வாக காரணத்தினால் **30.05.2014 வெள்ளிக்கிழமை காலை 10.00** மணிக்கு நடைபெறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதுசமயம் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**துணை மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல்/

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

<u>**கோயம்புத்தூர் மாநகராட்சி**</u>

**அனுப்புநர்**

**திருமதி. சு. லீலாவதி உண்ணி**
**துணை மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>**ந.க.எண் : 3848 / 2014 / எம்சி. 8 நாள் : 28.05.2014**</u>

<u>**அய்யா /அம்மா,**</u>

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தனது பதவியை **27.05.2014** ம் தேதி இரவு முதல் ராஜினாமா செய்ததை மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்பிக்க, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் **1981** ன் பிரிவுகள் **37** மற்றும் **41-**ன்படி, துணை மேயர் அவர்களால் மாநகராட்சி மாமன்ற சிறப்புக் கூட்டம் வரும் **29.05.2014** ம் தேதி வியாழக்கிழமை காலை **10.00** மணிக்கு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல்/

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**மாமன்ற சிறப்புக் கூட்டம் - மே 2014**

**நிகழ்ச்சி நிரல்**

| **பொருளடக்கம்** | | **பக்கம் எண்** |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** | |
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி - வணக்கத்திற்குரிய மேயர் தனது பதவியை ராஜினாமா செய்தது – மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக | 2 |

அ) **திருக்குறள்**

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

**(குறள் - 546)**

**விளக்கம்**

ஒரு நாட்டிற்கு நிலையான, ஆக்கமுறையிலான வெற்றி, படை ஆற்றலால் மட்டும் கிடைப்பதன்று. அதைத் தரவல்லது நீதி வழுவாத நல்லாட்சி.

**திருவள்ளுவர்**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வணக்கத்திற்குரிய மேயர் தனது பதவியை ராஜினாமா செய்தது – மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக

பார்வை - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ராஜினாமா கடிதம் நாள் 27.05.2014

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள், 27.05.2014 இரவு 11.00 மணிக்கு மாநகராட்சி ஆணையர் வழியாக மாமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள பார்வையில் காணும் கடிதத்தில், தான் வகித்து வரும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேயர் பதவியை 27.05.2014 ம் தேதி முதல் ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் மேயர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 3848/2014/எம்.சி.8

--------------------------------------------------------------------------------------------------------

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**துணை மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி